கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.180/2021 வா.சா.1 மகாலிங்கம்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 21.01.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

14) பிரதிவாதியிடம் இருந்த 4 ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டி நான் அவருக்கு அறிவிப்பு வழங்கி இருந்தேன் என்றால் சரிதான். நான் அறிவிப்பு வழங்கிய பிறகு பிரதிவாதி நான் கோரிய நான்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிறகும் நாளது தேதி வரை நான் படித்து பார்க்கவில்லையா என்றால் படித்து பார்க்கவில்லை.

15) 17.01.1958 தேதியிட்ட பாக ஆவணத்திலேயே வழக்கு சொத்து கெட்டி செட்டியார் வகையராவின் பூர்வீக சொத்து என கண்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாக ஆவணத்தில் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் அதன் பின்னிட்டு எப்படி யாருக்கு பிரிந்தது என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நான்கு ஆவணங்கள் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் பிரதிவாதிக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

16) வழக்கு சொத்து தவிர்த்து எங்கள் குடும்பத்திற்கு பிற சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தின் பிற சொத்துக்களுடன் சேர்த்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்திற்கும் என் தந்தை பெயரில் தவறுதலாக வா.சா.ஆ. 6 பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அத்தகைய தவறுதலான பட்டா அடிப்படையில் தான் வா.சா.ஆ. 2 முதல் வா.சா.ஆ. 5 மற்றும் வா.சா.ஆ. 7 வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டதால் அவை பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி பட்டாவின் அடிப்படையில் தான் நாங்கள்

வா.சா.ஆ. 1 பாக ஆவணம் ஏற்படுத்தினோம் என்றால் பட்டா மற்றும் அனுபவம் அடிப்படையில் ஏற்படுத்தினோம்.

17) வா.சா.ஆ. 6 பட்டா வழங்கப்படும் போது பிரதிவாதி விசாரிக்கப்பட்டாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வெறுமேனே உறுத்துக்கட்டளை வழக்கில் எதற்காக நீதிமன்ற ஆணையர் பார்வையிட கோரியிருந்தேன் என்றால் அங்கு இருந்த தென்னம் பிள்ளை மற்றும் பைப் லைன் ஆகியவற்றை காண்பிக்க பார்வையிட கோரியிருந்தேன். நீதிமன்ற ஆணையர் தன் அறிக்கையில் மொத்தமாகவே வெறும் 5 தென்னங் கன்றுகள் மட்டுமே அங்கு இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த தென்னங் கன்றுகள் ஆணையர் பார்வையிடுவதற்கு 2 நாட்கள் முன்பு நடப்பட்டவை என்றால் சரியல்ல. அவை ஒரு வாரத்திற்கு முன்பு நடப்பட்டன மேலும் பைப் லைன் ஆணையர் பார்வையிடுவதற்கு 3 மாதத்திற்கு முன்பு அமைக்கப்பட்டவை. நீதிமன்ற ஆணையர் தன் அறிக்கையில் குழாய் பதிக்கப்பட்டதாக குறிப்பிடாமல் காணப்பட்டதாகவே குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் உள்நோக்கத்துடன் தென்னங் கன்றுகளை ஆணையர் பார்வையிடுவதற்கு இரண்டு நாட்கள் முன்பு நட்டுவிட்டு ஆணையரை பார்வையிட அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல.

18) நான் என் வழக்குரை 4ம் பத்தியில் தென்னை மரம் பயிர் செய்து வருவதாக சொல்லி உள்ள நிலையில் அங்கு தென்னை மரங்கள் இல்லை என்றும் தென்னங் கன்றுகள் தான் இருந்தன என்றும் சொன்னால் சரிதான். நான் என் வழக்குரையில் 5 ம் பத்தியில் பிரதிவாதி நான் தென்னை மரங்களை நடுவதை இடையூறு செய்வதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். தென்னை கன்றுகளுக்கு எந்த கிணற்றிலிருந்து நீர் பாய்க்கிறேன் என்றால் புல எண். 107 ல் உள்ள எங்கள் கிணற்றிலிருந்து பாய்க்கிறேன். ஆனால் நான் என்

வழக்குரையில் வழக்கு சொத்தாக புல எண். 107 ல் கிணறு இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த சொத்திற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. புல எண். 108/1B காலையில் கிணறு உள்ளது என்றால் இல்லை.

19) நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு நான் ஆட்சேபணை தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் பத்தி 4 ல் க.ச.எண். 108/1 **B** காலையில் உள்ள கிணற்றிக்கு வழி தடமே இல்லை என கண்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது அது தவறாகும். அவ்வாறு எனில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை தவறு என கூறுகிறேனா என்றால் நீதிமன்ற ஆணையர் அறிக்கை தவறு தான். வழக்கு சொத்தில் கிணறு இருந்து நீர் பாய்த்து இருந்தால் அதனை நான் குறிப்பிட்டு இருப்பேன் என்றும் எனக்கு பாத்தியமே இல்லாததால் தான் அதனை குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. புல எண். 107/1A ல் உள்ள கிணறு பிரதிவாதிக்கு முழுமையாக பாத்தியபட்டது என்றால் புல எண். 107/1A ல் கிணறே இல்லை. மேற்படி விவரங்கள் அடிப்படையில் எனக்கு பாத்தியம் இல்லாததால் தான் நான் வழக்கு சொத்து விவரத்தில் நான்கு எல்லை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

20) நான் தான் பிரதிவாதியின் சொத்துக்குள் நுழைந்து தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எப்போது என்னிடம் தகராறு செய்ததாக கட்சி செய்கிறேன் என்றால் கடந்த ஜீன் 2021 ல் தென்னம் பிள்ளை நடும் போது தகராறு செய்தார்( **சாட்சி தாமாகவே 01.07.2021 அன்று தகராறு செய்ததாக கூறுகிறார்.** ) நான் சொல்லும் தேதி கற்பனையானது என்றால் சரியல்ல. பிரச்சனை தொடர்பாக நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. பிரதிவாதி தான் காவல் நிலையம் சென்றார் . பிரதிவாதி புகாரின் பெயரில் மனு ஏற்பு ரசீது வழங்கப்பட்டு உரிமையியல் பிரச்சனையாக இருப்பதால் நீதிமன்றத்தை அணுகும்மாறு

போலீசார் அறிவுறுத்தினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை அழைத்து விசாரித்தனர் என்றால் சரிதான். நான் தான் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்தேன் என்றும் வழக்கு சொத்து நாளது தேதி வரை பிரதிவாதி வசம் உள்ளது என்றும் என் வழக்கில் நியாயம் இல்லை என்பதால் தள்ளுபடிக்குரியது என்றும் சொன்னால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி